அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் : 24/2013

எனது இல :- EST-7/LEAVE/03/3460
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2013.11.05

அமைச்சின் செயலாளர்கள்

மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்

திணைக்களத் தலைவர்கள்

**தாபன விதிக்கோவையின் VI ஆம் அத்தியாயத்திலுள்ள 2:5, XII ஆம் அத்தியாயத்திலுள்ள 1:5 மற்றும் XXVIII ஆம் அத்தியாயத்திலுள்ள 6:4 ஆம் உப பிரிவுகளில் திருத்தம் செய்தல்**

தாபன விதிக்கோவையின் VI ஆம் அத்தியாயத்திலுள்ள 2:5, XII ஆம் அத்தியாயத்திலுள்ள 1:5 மற்றும் XXVIII ஆம் அத்தியாயத்திலுள்ள 6:4 ஆம் உப பிரிவுகளின் மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. தாபன விதிக்கோவையின் VI ஆம் அத்தியாயத்திலுள்ள 2:5 ஆம் உட் பிரிவினை இரத்துச் செய்வதற்கும், பின்வரும் விதத்தில் XII ஆம் அத்தியாயத்திலுள்ள 1:5 ஆம் உட் பிரிவினை திருத்துவதற்கும் மற்றும் XXVIII ஆம் அத்தியாயத்திலுள்ள 6:4 ஆம் உட் பிரிவில் “தந்தி” என்ற பதத்தினை “தொலைத் தபால் தகவல்” என்றவாறு திருத்துவதற்கும் அமைச்சரவையானது 2013.10.10 ஆந்திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் தீர்மானித்துள்ளது என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

1:5 மிகவும் அவசர சந்தர்ப்பம் ஒன்றில் அலுவலர் ஒருவருக்கு சேவைக்குச் சமூகமளிக்க முடியாததொரு நேரத்தில் அதனை ரெலிமேல்/ தொலைபேசிச் செய்தி / குறுஞ் செய்திச் சேவை (SMS) / மின் அஞ்சல் (e-mail) ஒன்றின் மூலம் தனது திணைக்களத் தலைவருக்கு அறிவிக்க வேண்டும் என்பதுடன் கடமைக்குச் சமூகமளித்தவுடன் உடனடியாக உரிய விண்ணப்பம் ஒன்றின் மூலம் விடுமுறைக்கான அனுமதியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

ஒப்பம்/ பி.பீ. அபேகோன்
செயலாளர்
பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு